வெற்றிலைப் பாக்குக் கடைகள் இரண்டு, வேர்க்கடலைக் கடைகள் இரண்டு, ஒரு சலவைச் சாலை, ஒரு தச்சுப் பட்டறை ஆகியவை தீக்கிரையாயின. சாலையோர விற்பனையாளர் (ஹாக்கர்) உடைமைகளும் (பூட்சுகள்) தீயில் அழிந்தன. உயிர்ச் சேதம் எதுவுமில்லை. உடைமைகள் விரயத்தின் மொத்த மதிப்பு ரூ. 15,400 என்று மதிப்பிடப்படுகிறது. புதுக்கோட்டை, வருவாய்க் கோட்ட அதிகாரி, நிகழ்ச்சி நடந்த இடத்திற்குச் சென்று பார்த்து, தீயினால் பாதிக்கப்பட்டோருக்குத் துயர் தணிப்பு வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டார். இந்தத் தீவிபத்து தற்செயலாகவே ஏற்பட்டது என்றும், வேண்டுமென்றுஎவரும் தீ வைத்ததாகச் சந்தேகப்படுவதற்கில்லை என்றும், பட்டுக்கோட்டை தாசில்தார் அறிவித்துள்ளார். தீ விபத்தில் வீடிழந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர் 7—3—69 அன்று ரூ. 50 வழங்கினார்.

(ஆ) வாலாஜா வட்டம், கலவை என்னும் இடத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களும் பாதிக்கப்பட்ட மக்கள் நிலையும்.

திரு. நா. வீராசாமி : பேரவைத்தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

"கடந்த 26—2—1969-லிருந்து தொடர்ந்து வட ஆற்காடு மாவட்டம், வாலாஜா வட்டம், கலவை என்னும் இடத்தில் தனியார் குடிசைக்கும், அரிசி ஆலைக்கும், அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கும் தீ வைக்கப்பட்டு வருவதனால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை பற்றியது."

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, the Collector of North Arcot has reported that there were fire accidents in Kalavai village in Wallajah taluk on 20th February, 2nd, 4th and 6th March 1969 resulting in destruction of sugarcane crops, tea shop, part of rice mill and the high school shed. The total value of property lost was about Rs. 5,000 out of which the school's share was Rs. 4,000. As no residential houses were involved, the question of granting cash relief did not arise.

The school shed was lost in the fire on 6th March 1969 and prior to that date, the school was running 4 sections in the shandy sheds and under the greenwood trees and 3 sections in the shed which was burnt. The Tahsildar, Wallajah and Block Development Officer, Timiri, were instructed by the District Revenue Officer to arrange for suitable accomodation to run the school. The Chief Education Officer, Vellore, is of the opinion that all the sections could be run in the temporary buildings without much inconvenience as the classes have to be run only till the first week of April 1969. He has promised to spare some amount from out of the funds available with him under Secondary Education Fund.

The Superintendent of Police, North Arcot district, visited the scene of occurrence in all the four cases on 15th March 1969. He is of the opinion that the fires which broke out on 20th February and 6th March 1969 were accidental while the fires on 2nd and 4th March 1969 were not free from mischief and in this connection, one insane Mooban, aged 25 years, son of Bomini is suspected. It is reported that 4 cases under Section 436, I.P.C., have been registered in Kalavai Police Station and the Inspector of Police, Cheyyar has taken up personal investigation in all of them. Investigation made by the Police discloses that it is not true that fires were started to divert the public in order to commit thefts as no such thefts have actually taken place. This does not appear to be any political motive as there is no faction among the political sympathisers in the village. Police patrols have been strengthened in the area to prevent further incidents.

1969 மார்ச் 26]

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, திமிரியில் இருக்கின்ற டி. டி. ஓ., தாசில்தார் இவர்கள் பள்ளிக்கூடத்தைப் பார்வை இட்டும், பள்ளியைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எரிந்துபோன கட்டடத்தைக் கட்ட அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கல்வி அதிகாரி அவர்கள் அதற்கான வேலைகளைக் கல்வி நிதியிலிருந்து செய்யலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். அது எவ்வளவு தூரம் நடக்கிறதோ அதை விரைவு படுத்தலாம்.

(இ) கோவை மாவட்டத் தலைமை மருந்தகத்தில் எக்ஸ்ரே படச் சுருள் இன்மையால் நோயாளிகள் பாதிப்பு.

திரு. எம். பூபதி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"கோவை மாவட்டத் தலைமை மருந்தகத்தில் எக்ஸ்ரே பிலிம் இன் மையால் பல கொடிய நோய்களுக்கு சிகிச்சை செய்து கொள்ள இயலாமல் நூற்றுக்கணக்கான நோயாளிகள் கஷ்டப்படும் நிலை."

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர் களே, இந்திய அரசு எக்ஸ்ரே படச்சுருள் இறக்குமதியை நிறுத்திவிட்ட காரணத்தால் நாடு முழுவதிலும் இப் படச் சுருள் பற்றாக்குறை பெரிதும் இருந்து வருகிறது. இந்தியாவில் எக்ஸ்ரே படச்சுருள் தயாரிக்கும் ஒரே நிறுவனமாகிய இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறு வனம் நாட்டின் தேவையில் சுமார் 50 சதவீதம் மட்டுமே வழங்குவதால் எக்ஸ்ரே படச்சுருளின் தேவையைச் சரிக்கட்ட இயலவில்லை. இதனால் கடந்த மூன்று அல்லது நான்கு மாதங்களாக அரசு மருத்துவ மனையில் படச்சுருள் பற்றாக்குறை ஏற்பட்டது ; கோயம்புத்தூர், அரசுத் தலைமை யிட மருத்துவ மனையிலும் இப்பற்றாக்குறை இருந்தது. இந்திய அரசு இப்படச்சுருளை இறக்குமதி செய்யும் கொள்கையைத் தளர்த்தினால் அன்றி, அல்லது இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் முழுத் தேவையும் நிறைவு செய்யும் வகையில் உற்பத்தி யைப் பெருக்கினால் அன்றி, இந்த இடர்பாடு தொடர்ந்து நீடிக்குமெனத் தெரிகிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இந்த பிலிம் இந்தியா விலேயே உற்பத்தி செய்யப்பட்டும், வெளிநாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்படுவதால் மத்திய சர்க்காரை வற்புறுத்தி, நம் நாட்டில், குறிப் பாக தமிழ்நாட்டில், பல மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே இல்லாத நெருக் கடியைப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுகுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர் களே, இந்தத் தட்டுப்பாடு நம் மாநிலத்தில் மட்டுமல்லாமல், அகில இந்தியாவிலும் இருப்பதை மத்திய சர்க்கார் அறியும். உதகையில் இந்துஸ்தான் ∴போட்டோ பிலிம் கம்பெனியிலிருந்து 50 சதவீதம் கொடுப்பதோடு, மேலும் அவர்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டால், அது பூர்த்தி செய்யப்படும். அதோடு வெளிநாடு களிலிருந்து இறக்குமதி செய்வதையும் தளர்த்தினால், நலமாக இருக்கும். அந்த வகையில் அரசாங்கம் கவனம் செலுத்தும்.